**தலவாக்கலை லிந்துல நகர சபை - 2022**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலவாக்கலை லிந்துல நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானச் செலவினக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலவாக்கலை லிந்துல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (l) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.2(அ) ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் தொடரப்பட்டுள்ள 13 வழக்குகள் தொடர்பாக நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | தகவல்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதாகவும் 06 வழக்குகள் தொடர்பான விபரங்கள் இந்த பதிலுடன் சமர்ப்பதாகவும் | நிதிக்கூற்றுக்களில் வழக்குகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 02 வங்கி கணக்குகளுக்குரிய காணப்பட்ட மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா 742,107 காசு கணக்கில் திருத்தம் செய்யப்படாமல் மதிப்பிழந்த காசோலை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதும் அது மீளாய்வாண்டிலும் சீராக்கப்பட்டு இருக்கவில்லை. | உரிய கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்கம் செய்வதாக | கணக்குகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டுக்குரிய கணக்கீடு செய்யப்படாத பெற வேண்டிய ரூபா 952,500 ஆன முத்திரை கட்டணங்கள் மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளும் போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் பெற வேண்டிய முத்திரை கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | அடுத்த நிதிக்கூற்றுகளில் தயாரிக்கும் போது சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வருமான மீதியை மிகைத்து கிடைத்திருந்த ரூபா 5,204,100 ஆன முத்திரை வரி மற்றும் முன்னைய ஆண்டுக்காக கிடைத்திருந்த ரூபா 1,259,100 ஆன வாடி வீட்டு வாடகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு இருக்கவில்லை. | இக் கணக்கீட்டு குறைபாட்டை அடுத்த காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியான பெறுமதி நிதிக கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டில் கை தவிர்க்கப்பட்ட 101 சொத்துக்கள் அலகுகளும் ஏல விற்பனை செய்யப்பட்ட 19 பொருட்களினதும் கிரய பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளில் இருந்து அகற்றப்படாத இருந்த உடன் விலை குறிப்பிடப்படாத 1714 நூலக புத்தகங்கள் மற்றும் கழிவுப்பொருள் தொகுதியில் இருந்த சேதன பசளை இருப்பின் பெறுமதியும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் சீராக்கம் செய்வதாக | கணக்குகளிலிருந்து பெறுமதி நீக்கப்பட வேண்டும். நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட ரூபா 119,000 இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தை சீராக்குவதாக | நேரடி செலவு வைத்தல்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| ஊ) | பெற வேண்டியதாக கருதி மதிப்பீடு கணக்கீடு செய்யப்பட்ட நீதிமன்ற தண்டப் பண வருமானம் மற்றும் பெறுவனவுகளுக்கு இடையே வேறுபாடு திரண்ட நிதியத்திற்கு சீராக்காமல் பெறவேண்டிய மீதியொன்றாக மொத்தம் ரூபா 4,998,832 தொகை தொடரந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன. | அடுத்த நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீதி ரூபா 1,293,013 மற்றும் தளவாடம் மற்றும் பொருத்திகளில் ரூபா | 2023 இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | நிதிக் கூற்றுகளில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 2,580,980 ஆன பாவனைப்பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் சபைக்கு சொந்தமாக இல்லாத ரூபா 98,700 ஆன நீர் பௌசர் ஒன்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க காரணத்தினால் நிலையான சொத்துக்கள் ரூபா 3,972,693 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | ரூபா 240,700 ஆன 14 சமையலறை உபகரணங்களும் நன்கொடையாக கிடைத்து இருந்த லெப்டொப் பிரிண்டர் ஸ்கேனர் போன்ற 45 பொருட்களும் பெறுமதி இனங் காணப்படாமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இத்தகவல்களை சரியாக பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கூற்றுகளில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | முன்னைய இரண்டு ஆண்டு களுக்குரிய செலுத்தப்பட்ட ரூபா 437,036 ஆன கணக்காய்வு கட்டணங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 437,036 தொகை 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுகளில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 07 கணக்கு மீதிகளுக்குரிய ஆரம்ப புத்தக மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 5,064,536 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | மீதிகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 6,988,777 பெறுமதியான 13 கணக்கு மீதிகள் அட்டவணைகள் மற்றும் காலப்பாய்வு சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது. | குறைபாடுகள் தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளதாக | அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i நி.பி 371 | 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 403,000 ஆன முற்பணங்கள் 3 மாதங்கள் முதல் இரண்டு 02 வருடங்கள் வரையான காலப்பகுதியில் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் தவறுகளை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii நி.பி 189 மற்றும் 486 | மதிப்பிழந்த 08 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் தவறுகளை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii நிதிப்பிரமாணம் 571(3) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு காலம் கடந்த ரூபா 374,734 ஆன 15 பொது வைப்பு மீதிகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை . | எதிர்காலத்தில் தவறுகளை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| 1988 மே 17 ஆம் திகதிய 1988/22ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரி ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு அடிப்படையில் விதவரி அறவிடப்பட்டிருந்தது | சரியாக மதிப்பீடு செய்து வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,345,147 ஆக இருந்துடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,578,700 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,780,000 | 6,724,918 | 6,148,583 | 3,881,965 | 6,570,770 | 7,049,655 | 6,551,121 | 3,305,630 |
| (ii) | வாடகை | 10,045,040 | 11,805,249 | 11,338,817 | 6,034,029 | 7,503,540 | 9,843,300 | 8,419,321 | 5,567,597 |
| (iii) | அனுமதிப்பத் திரககட்டணங்கள் | 895,000 | 594,000 | 594,000 | - | 2,005,500 | 723,000 | 946,250 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 59,801,720 | 7,500,000 | 8,597,808 | 5,493,232 | 60,026,540 | - | 43,517,272 | 6,591,040 |
| | | 77,521,760 | 26,624,167 | 26,679,208 | 15,409,226 | 76,106,350 | 17,615,955 | 59,433,964 | 15,464,267 |

**2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை வீத வரி ரூபா 2,121,128 மீளாய் வாண்டிலும் அறவிடப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்நிலுவை ரூபா 4,679,130 வரை அதிகரித்து இருந்தது. | . நிலுவை வீதவரி அத விடுவதற்காக ஆதனங்களை தடை செய்தல் மற்றும் நடமாடும் சேவை வேலை திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| i | பொது வியாபார நிலையத்துக்குரிய 03 கடைகளில் இருந்து 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இருந்து ரூபா 100,396 ஆன நிலுவை கடை வாடகையொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா | பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு குத்தகையாளர் ஒருவரை தெரிவு செய்து அதனை குத்தகைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டியது கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை ரூபா 617,885 வரை அதிகரித்து இருந்தது. | | |
| ii. | உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டில் இருந்து வரும் ரூபா 192,600 ஆன வீட்டு வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமானத்திற்காக பொது சுகாதார பரிசோதகருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 4,998,832 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 494,400 ஆக இருந்தது. . | குறித்த நிறுவனங்களுக்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபை சட்டத்தின் 104 மற்றும் 127(ஆ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொது வடிகான் நிர்மாணம் அல்லது வடிகாண் முறைமை மற்றும் பொது குளியல் இடங்கள் என்பன திருத்தம் செய்யப்பட்டோ இருக்கவில்லை. | சபை நிதியத்தில் இருந்து நிர்மாண வேலைகளை நிறைவேற்ற முடியாது இருந்ததாக | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வாடி வீட்டு வாடகை வருமானமாக கிடைத்து மதிப்பிழந்த 2021 மே 10 ஆம் திகதிய ரூபா 100,000 ஆன காசோலை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2003 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிர்மாணக் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,783,220 மற்றும் ரூபா 12,179,252 கூட்டுத்தொகையான நிர்மாண கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபை எல்லைக்குள் 219 அத்துமீறிய நிர்மாணங்கள் அவதானிக்கப்பட்டதுடன் நகர சபைக்குரிய வாடகை பாடி வீடு அமைந்துள்ள காணியில் 3000 சதுர அடிக்கு மேற்பட்ட அளவிலான காணியில் நிரந்தர கட்டிடம் ஒன்று அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. தர்மலிங்கம் கலாசார மண்டப வளவில் அத்துமீறிய கட்டிடமொன்றை நிர்மாணித்து மின்சார மற்றும் தொலைபேசி வசதிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தற்போது அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | அத்துமீறிய நிர்மாணங்கள் அகற்றப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 17,280,286 ஆன இயந்திரங்கள் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் 327 அலகுகள் மற்றும் 07 வாகனங்கள் என்பன 02 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் விளைவற்று மற்றும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | கணிப்பீட்டு சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அவதானிப்புகள் கிடைத்த பின்னர் நடவடிக்கை எடுப்பதாக. | பயன்படுத்துவதற்கு அல்லது கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பழைய ஹலர் இயந்திரத்தின் ஓட்ட மோட்டார் கழற்றி அகற்றப்பட்டிருந்ததுடன் அப்பழைய இயந்திரம் சிதைவடைந்து காணப்பட்டது. | இந்த இயந்திரத்தை எதிர்காலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து சபைக்கு வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுப்பதாக | மோட்டாரை கழற்றி அகற்றுமை தொடர்பாக பரிசோதனையொன்றை மேற்கொள்ள வேண்டியதுடன் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியத்தில் ரூபா 54,635 ஆன 217 இருப்பு அலகுகளின் பற்றாக்குறையொன்று தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் கணிப்பீடு செய்து பற்றாக்குறை மற்றும் மிகை என்பவற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பற்றாக்குறை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கேள்வி நடைமுறை இன்றி தேவிஸ்ரீபுர சேவை இல்ல கட்டிடத்தின் நிலமாடியில் தனியார் முன்பள்ளி பாடசாலை ஒன்றை நடத்திச் செல்வதற்காகவும் தலைவாக்களை முன்பள்ளி பாடசாலை உடற் கல்வி நிறுவனம் ஒன்றாக பேணி செல்வதற்காகவும் வெளித்தரப்பினருக்கு மாதாந்த கூலி அடிப்படையில் முறையே மூன்று ஆண்டுகள் மற்றும் ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | பொதுச்சபை தீர்மானத்தின் பேரில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக | விதிகளின் பிரகாரம் கேள்வி நடைமுறைகளை பின்பற்றி குத்தகைக்கு வழங்க வேண்டும். |
| (ஆ) சபைக்கு சொந்தமான வாடிவீடு மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஓராண்டு காலத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்வி கோரி கேள்விதாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு பின்னர் அங்கீகாரம் இன்றி 10 ஆண்டு காலப்பகுதி வரை குத்தகை காலம் நீடிக்கப்பட்டு குத்தகையாளருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது | முன்னால் தலைவரின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் 10 ஆண்டு கால பகுதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | நடவடிக்கைகள் முறைப்படுத்த வேண்டும். |

### 3.7 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 956,750 ஆன மதிப்பீடொன்றின் பேரில் குனானந்தபுர வடிகாண் நிர்மாணத்திற்காக 2022 மார்ச் 07 ஆந் திகதி தலவாக்கலை எக்கமுத்து சமூர்த்தி சங்கத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2022 மே 08 ஆம் திகதிக்கு முன்னர் நிர்மாணத்தை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி | நிர்மாணத்தை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 191,350.00 ஆன முற்பணத் தொகையை சபைக்கு மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | நிர்மாண நடவடிக்கைகளை மதிப்பீட்டு நியமத்திற்கு நிறைவேற்றப்பட வேண்டியதுடன் முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டும் |

செய்யப்பட்டு இருக்கவில்லை 2022 மார்ச் 21 ஆந் திகதி ரூபா 191,350 ஆன முற்பணத்தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை அம்முற்பணம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.இந்த நிர்மாணத்தை நிறைவேற்றாமையால் அதிகளவு பள்ளத்துடன் கூடிய பிரதேசங்களில் இருந்து வழிந்தோடும் நீர் அருகில் அமைந்துள்ள வீடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தது.

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஓய்வுபெற்று இருந்த, இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் சகாதார தொழிலாளர்கள் மூன்று பேரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ரூபா 396,478 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஓய்வூதிய கடிதங்கள் சீராக்கப்பட்டு நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) ஓய்வுபெற்றுச் சென்ற மூன்று தொழிலாளர்களின் ஓய்வூதிய கோவையில் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமையால் 10 ஆண்டுகள் அவர்களுக்கு ஓய்வூதியம் இழக்கப்பட்டிருந்தது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஓய்வூதிய கடிதங்கள் சீராக்கப்பட்டு நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

## 4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று அல்லது நிர்வாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாளான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 16 சதவீதம் முதல் நூறு சதவீதத்தை மிகைத்தும் 07 செலவின விடயங்களில் 10 சதவீதம் முதல் நூறு சதவீதத்தை மிகைத்து விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாடாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்திற்காக பாதீடு தயாரிக்கும் போது நடைமுறைச் சாத்தியமான பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டுமென. | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு கவனத்திற் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

## 4.3 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார பிரதேசத்தில் நாளொன்றுக்கு 01 தொன் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்டிருந்த போதும் உக்கக்கூடிய உக்காத கழிவுகளாக வேறுபடுத்தாமல் முறையற்ற விதத்தில் மயானத்திற்கு அண்மித்த இடமொன்றில் கழிவுகள் கொட்டபப்ட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | சேதனப் பசளை உறப்த்திக்கு கவனம் செலுத்த வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை | மீளாய்வாண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |